**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.30/2024**

**PW12**

| | | |
|---|---|---|
| **Name** | : | ஜெயப்பிரகாஷ் |
| **Father's Name** | : | கந்தசாமி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | சென்னை |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Accused present.

Witness examined in accordance with High court of Madras video conferencing Rules 2020.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை ஓட்டேரி காவல் நிலையத்தில் குற்ற பிரிவு ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 05.12.2022 அன்று போளூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது அந்நிலைய குற்ற எண். 409/2022 சட்டப்பிரிவுகள் 294(b),307 இதசப்படி உதவி ஆய்வாளர் ஐயப்பன் பதிவு செய்திருந்த வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். உதவி ஆய்வாளர் ஐயப்பன் தற்போது உயிருடன் இல்லை. அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.10**. சம்பவ இடமான பூங்கொல்லைமேடு கிராமத்தில் எதிரியின் மாமனார் பாலகிருஷ்ணன் வீட்டிடம் சென்று சாட்சிகள் கமலக்கண்ணன் மற்றும் வெங்கடேசன் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.11. பின்பு சம்பவ இட சாட்சிகளான சிவக்குமார், கமலக்கண்ணன், வெங்கடேசன் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி போளூர் அல்லிநகர் பார்க் அருகே சென்றபோது ரகசிய தகவலாளி எதிரியை அடையாளம் காட்டினார்.

எதிரியை பிடித்து விசாரித்தபோது எதிரியை முறைப்படி கைது செய்தேன். பின்பு சாட்சிகள் செல்வராசு, பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மணிகண்டன் என்பவரை அடிக்க பயன்படுத்திய முள்வேலி விறகு கட்டையை ராஜமாணிக்கம் என்பவரின் கரும்பு தோட்டத்தில் ஒளித்துவைத்திருப்பதாகவும், தன்னை அழைத்துச்சென்றால் அதை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அதன்பின்பு எதிரியையும், சாட்சிகளையும் ராஜமாணிக்கம் என்பவரின் கரும்பு தோட்டத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றபோது கரும்பு தோட்டத்தில் இருந்த எதிரி ஒரு முள்வேலி கட்டையை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுன் நிலையம் வந்து எதிரியை பாராவசம் ஒப்படைத்து ஆவணங்கள் தயார் செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு 06.12.2022 அன்று இவ்வழக்கின் சாட்சி லட்சுமி என்பவர் முன்னிலையில் மணிகண்டன் என்பவரின் இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் பேண்ட், கருப்பு ,சிகப்பு கோடு கட்டம் போட்ட சட்டை ஒன்று படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். தற்போது நீதிமன்றத்தில் video conferencing மூலம் காண்பிக்கப்படும் இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் பேண்ட், கருப்பு ,சிகப்பு கோடு கட்டம் போட்ட சட்டை ஒன்று அன்று கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள். அவை முறையே **அ.சா.பொ.4 மற்றும் 5**. பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமகிருஷ்ணன், சுதாகர் ஆகியோர் முன்னிலையில் ரத்தக்கறை படிந்த மண் மற்றும் சாதாரண மண் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். இவ்வழக்கில் சாட்சிகள் ராமதாஸ், கார்த்தி, சக்கரவர்த்தி, சுப்பிரமணி, லட்சுமி , ராமகிருஷ்ணன், சுதாகர் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த மணிகண்டன் என்பவர் 08.12.2022 அன்று காலை 8.30 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்பேரில் வழக்கை 294(b),307இதச பிரிவில் இருந்து 294(b),302 இதசவாக ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.12**. பின்பு சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் மணிகண்டன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் ராஜாபாபு, மணிகண்டன், ஆனந்தன் , சிவக்குமார், லட்சுமி ஆகியோர் முன்னிலையில் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை

அறிக்கை **அ.த.சா.ஆ.13.** பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடித்தை தலைமைக்காவலர் செல்வராஜ் என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். பின்பு பிரேத விசாரணை சாட்சிகளான ராஜாபாபு மணிகண்டன், ஆனந்தன் , சிவக்குமார், லட்சுமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் மற்றும் உடல் உள்ளுறுப்புகளை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேன். 14.12.2022 அன்று தடய அறிவியல் ஆய்வக இயக்குநர் பாஸ்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய 26.12.2022 தேதியிட்ட உயிரியல் அறிக்கை **அ.த.சா.ஆ.14**. சென்னை தடய அறிவியல் துறையில் இருந்து பெறப்பட்ட குருதி வடிநீரியல் அறிக்கை எண்.1113/2023 **அ.த.சா.ஆ.15**. 28.04.2023 தேதியிட்ட குருதி வடிநீரியல் ஆய்வறிக்கை எண்.1105/2022 **அ.த.சா.ஆ.16**. பின்பு 23.12.2022 அன்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் நரேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். இவ்வழக்கில் சிறப்பு உதவி ஆய்வளார் செல்வராஜ், முதல்நிலைய காவலர் கோமதி, உதவி ஆய்வாளர் ஐயப்பன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கில் குற்ற வழக்கு தொடர்பு துறை அலுவலரின் மாதிரி இறுதி அறிக்கை பெற்று எதிரி மீது 11.01.2023 அன்று 294(b),302 IPC– ப்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - வழக்கறிஞர் கேட்டுக்கொண்தற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

V. Varalakshmi
Bench clerk Gr.1 K. Jayaprakash N.Gopinathan
Data Entry Operator

**Court site coordinator** **Deponent** **Remote site coordinator**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.